முடிவெடுக்கப்படும் என்று பல்வேறு கேள்விகளுக்கு நான் பதில் சொல்லியுள்ளேன். மாண்புமிகு அம்மா அவர்கள் திருச்சியிலே ஒரு புதிய காகிதத் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டி, வருகின்ற 2015, டிசம்பர் மாதம் உற்பத்தியைத் தொடங்க இருக்கின்ற காரணத்தினால், அரசின் சார்பாகப் புதிய காகித ஆலையைத் திறப்பதற்கு வாய்ப்பில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 291, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

291—

புதிய பேருந்து

***35233—திரு. டி. சுரேஷ்குமார்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு வட்டம், இராயண்டாபுரம் ஊராட்சி, தாதன்முடியனூர், பெருங்களத்தூர், மணலூர் ஆகிய பகுதிகளுக்குப் புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அரசுப் போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் கோட்டம், திருவண்ணாமலை மண்டலம் சார்பில், தடம் எண் 233-ல் செங்கம்-கள்ளக்குறிச்சி (வழி) தண்டராம்பட்டு, இராயண்டாபுரம், தாதன்முடியனூர், பெருங்களத்தூர் மற்றும் மணலூர் வழித்தடத்தில் தினசரி 6 நடைகள் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார் அவர்கள்.*

2014 ஜூலை 31]

திரு. டி. சுரேஷ்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர் அம்மா! தமிழகத்தின் ஒளிவிளக்கே அம்மா! தமிழரின் உணர்வே அம்மா! தமிழர்களின் இதயத் துடிப்பே அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில் மட்டுமல்ல உலகத் தமிழர்களின் இதய தெய்வமே அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) மீனவர்களின் குலதெய்வமே அம்மா! உங்களை வணங்குகிறேன். நான் கேட்ட கேள்வி அவையில் எடுத்துக்கொள்வதற்கு முன்னதாகவே என் தொகுதிக்குச் செய்து கொடுத்த மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சந்திரசேகர் அவர்கள்.

திரு. ஆர். சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். மணப்பாறையிலிருந்து பொய்கைப்பட்டி, பன்னாங்கொம்பு, புத்தாநத்தம், கருமலை வழியாக துவரங்குறிச்சி வரை தொடர் பேருந்து இயக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்ட மக்களுடைய நலன் கருதி, 110 புதிய வழித்தடங்களை திருச்சி மாவட்டத்திற்கு மட்டும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் இந்த 3 ஆண்டுகளில் மக்களுடைய பயன்பாட்டிற்காக வழங்கி இருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, மணப்பாறை சட்டமன்றத் தொகுதியிலும் பல்வேறு வழித்தடங்களை வழங்கி அந்த மக்களுக்கு மகத்தான சேவைகளைச் செய்து, இன்று பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய வழித்தடங்களில் ஆய்வு செய்யப்பட்டு, பயணிகளின் எண்ணிக்கைக்கேற்ப மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று,

நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

முற்பகல் 10-45

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறையில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்பேரில், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சென்னை மாநகரத்தில் சிற்றுந்துச் (Small Bus) சேவையைச் சிறப்பாக நடத்தி வருகிறார்கள். இச்சேவையைத் தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து மாவட்டங்கள் மற்றும் மலைப் பகுதிகளில் செயல்படுத்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தில் மக்கள் வசிக்கக்கூடிய சிறிய சந்துகளில் பெரிய பேருந்துகள் செல்ல முடியாது. சிறிய பகுதிகளுக்கு மற்ற பகுதிகளிலிருந்து மக்கள் எளிதில் சென்றடையக்கூடியவகையிலும், மக்களுக்குச் சுகமான பயணத்தை வழங்கக்கூடியவகையிலும் தமிழக அரசு வரலாற்றில் இல்லாத வகையில், ஒரு புதிய வரலாறாக சென்னை மாநகர மக்களுக்குச் சிற்றுந்துகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தங்களுடைய திருக்கரங்களால் கொடி அசைத்துத் துவக்கிவைத்தார்கள். சென்னை மாநகரில் இருக்கக்கூடிய பெரிய பேருந்துகளில் சராசரியாக நாள் ஒன்றுக்கு 1,002 பயணிகள் பயணிக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய திட்டமான சிற்றுந்துகளில் நாளொன்றுக்கு, சராசரியாக ஒரு சிற்றுந்துக்கு 775 பயணிகள் பயணிக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய திட்டம் சென்னை மக்களிடத்தில் ஒரு

2014 ஜூலை 31]

மிகப்பெரிய வரவேற்பைப் பெற்று, அந்த மக்களுக்கு மகத்தான சேவையை இத்திட்டத்தின்மூலம் வழங்கி வருகிறது. அதேபோல் மலைப் பகுதிகளில் பெரிய பேருந்துகள் செல்லுகின்றபோது, மலைப் பகுதிகளில் குறுகிய பகுதிகளில் பேருந்து சென்று திரும்பமுடியாத சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, மலைப் பகுதிகளுக்குச் செல்லக்கூடிய அந்தப் பெரிய பேருந்துகளை மாற்றி, சிறிய பேருந்துகளை, சிற்றுந்துகளை இயக்குவதற்கு முதல்முறையாக மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அதன் அடிப்படையில், விழுப்புரம் கோட்டத்தில் ஏழு பேருந்துகளை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தங்களுடைய திருக்கரங்களால் கொடி அசைத்து, மக்களுடைய பயன்பாட்டுக்கு வழங்கியிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மலைப் பகுதிகளுக்கு மட்டும் 250 சிற்றுந்துப் பேருந்துகளைக் இயக்குவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்தப் பேருந்துகளுக்குக் கூண்டு கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 292, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

292—

தரம் உயர்த்துதல்

***43711—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதி, திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம், அலப்பலச்சேரியிலுள்ள கால்நடைக் கிளை நிலையத்தினைக் கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,